உ

சிவமயம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும்

தெல்லிப்பழை செருக்கப்புலத்தை

வதிவிடமாகவும் கொண்ட

# பூலோகசுந்தரம் வைத்தியநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

**2001 - 02 - 08**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு
இந் நூல் சமர்ப்பணம்.
மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறைந்த
பேரொளியாய் இன்சொல் பேசி
அன்புடன் எம்மை பேணிக்காத்து.
பண்புடனும், பாசத்துடனும், நேசத்துடனும்
இன்முகத்தினனாய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது
அன்புத் தந்தையின்
திருப்பாதங்களுக்கு இம் மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சுழிபுரம் – செருக்கப்புலம்

# அமரர்

# பூலோகசுந்தரம் வைத்தியநாதன்

(ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு இயக்குனர்)

மலர்வு:
1936-02-10

உதிர்வு:
2001-01-10

### திதி வெண்பா

விக்கிரம ஆண்டினிலே மேவுமதி மார்கழியில்
தக்க அபரப் பிரதமையில் - மிக்கபுகழ்
பேசும் சுழிபுரம்சேர் வைத்தியநா தன்சிவனாம்
ஈசனடி சேர்ந்தார் இயம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருவே என் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவே என் னுறவேஎன் னூனே ஊனின்
உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே.

## திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அமலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிலும் புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச் சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி
யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்ல
தோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமரர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்க்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை உள்ளம் படைத்த உத்தமர்

எங்கள் யாவருக்கும் இனியவராகவும் பண்பாளராகவும் விளங்கிய அமரர் 1936 ம் ஆண்டு சுழிபுரம் பெரிய பரிகாரியார் பரம்பரையில் வந்த டாக்டர் பூலோகசுந்தரம் (L. I. M. Madras) அவர்களின் மகனாக பிறந்தார்.

இவர் தனது வாழ்வில் ஆரம்பக் கல்வியை வட்டு அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் பின்பு பம்பலப்பிட்டி சென் பீற்றர் கல்லூரியிலும், வெள்ளவத்தை அனித்தியா கல்லூரியிலும் உயர் கல்வியை வட்டு இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று 1957 ம் ஆண்டு இலங்கைத் தரைப்படையில தொலைத் தொடர்பு இயக்குநராக கொழும்பில் சேவை செய்தார்.

1976 ம் ஆண்டு மருத்துவ காரணத்தினால் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். தனது பாரம்பரிய தொழிலாகிய சித்தவைத்திய துறைக்கு தான் உதவா விட்டாலும் தனது மக்கள் உதவ வேண்டும் என்ற எண்ணத்தோடு தனது மூத்த மகனான மனோரஞ்சனை யாழ்/ மாவட்ட சித்த மருந்து உற்பத்தி விற்பனை வைத்திய சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தில் முழுநேர சேவை செய்ய இணைத்தார்.

அன்னார் தனது கடைசி நேரத்திலும் மனவுறுதியும், நேர்மையும் குன்றாமல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !

டாக்டர் குருநாதன் ஸ்ரீகணநாதன்
முகாமைப் பணிப்பாளர்,
(யாழ். மாவட்ட சித்தமருந்து உற்பத்தி விற்பனை
வைத்திய சேவைகள் கூட்டுறவுச் சங்கம்)

குருநாதன் வைத்தியசாலை,
சங்கானை.

செம்பியன் லேன்,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வைத்தியநாதன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்துமா சமுத்திரத்தில் மாங்காய் போன்ற வடிவில் இந்திய சங்கிலிக்குப் பதக்கம் போல அமைந்துள்ளது இலங்கை எனும் இச் சிறிய தீவு. இது தன் புவியியல் அமைவிடத்தால் பல நூற்றாண்டு காலமாக அரசியல் பொருளாதார முக்கியத்துவம் கொண்டதென் பதைப் பல வல்லரசுகளும் மாறி மாறி தமதாதிக்கத்துக்குட்படுத்தி யதில் இருந்து அறியலாம். வேறு எந்நாட்டிலும் இல்லாதவாறு இயற்கைத்துறைமுகமாகத் திருகோணமலை இலங்கையில் அமைந் திருப்பதும் வல்லரசுகளுக்கு எமது நாட்டின் மீது கவனம் செலுத்த வும் காரணியாக இருந்தது எனலாம்.

இந்த ஈழத்திருநாட்டின் சிரசு போல அமைந்திருப்பது யாழ்ப் பாணம் ஆகும். தனக்கென ஒரு பண்பாட்டுப் பாரம்பரியத்தை யுடையதும் சைவமும் தமிழும் வளர்ந்த பழம்பெரும் புண்ணிய பூமியுமாகிய யாழ்ப்பாணத்தில் ஒழுக்கம், கல்வி, பக்தி, விருந்தோம் பல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் ஊர்களில் ஒன்றாகிய சுழிபுரத் தில் சைவவேளாண் உயர்குல திலகர் பிரபு தண்டிகை சந்நுரு குல சேகர முதலியார் மரபுவழித்தோன்றலாகிய வைத்தியகலாநிதி தம்பிப் பிள்ளை பூலோகசுந்தரமும் (I. I. M. Madras) முன்னாள் கொழும்பு அரசினர் ஆயுள்வேதக்கல்லூரி விரிவுரையாளர்) வட்டுக்கோட்டை இராசவல்லவ முதலியார் மரபுவழித் தோன்றலாகிய கமலாதாட்சி அம்மாவும் ஆற்றிய இல்லறத்தின் பயனாக வைத்தியநாதன் அவர்கள் 1936 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பிறந்தார்.

அநுராதபுரத்தில் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பணிபுரியும் பத்ம நாதன் அவர்களும் நுவரெலியாவில் வைத்தியராகக்கடமையாற்றும் நாகநாதன் (பீற்றர்) அவர்களும் வவுனியா செட்டிகுளத்தில் வைத்தி யராக விளங்கும். கயிலாயநாதன் அவர்களும் பொறளையில் வைத்தியராக கடமைபுரியும் திருமதி மனோரஞ்சிதம் தவத்துரை அவர்களும் வைத்தியநாதனின் அருமைச்சகோதரர் ஆவர்.

வைத்தியநாதன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை வட்டுக் கோட்டை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் உயர்கல்வியை பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் கல்லூரி, வெள்ளவத்தை அனித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார்.

இவர் தனது இருபத்தோராவது வயதில் 1957-07-02 ஆம் திகதி இலங்கை தரைப்படையில் தொலைத்தொடர்பு இயக்குநராகச் சேவையைச் சிறப்பாகப்புரிந்து 1976-08-02 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த செருக்கப்புலம் பதியில் வாழ்ந்த நாகலிங்கம் - நாகமுத்து தம்பதிகளின் கனிட்ட புதல்வி தனலட்சுமி எனும் மங்கை நல்லாளை வாழ்க்கைத் துணைவியாக 1960 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டு இல்லறத்தை நல்லறமாக வாழ்க்கையை இனிது நடத்தியதன் பயனாக பூலோகறஞ்சினி, மனோறஞ்சன், தனநாதன் ஆகிய மூவரைத் தங்கள் பிள்ளைச்செல்வங்களாகப் பெற்றனர்.

தமது மகள் பூலோகறஞ்சினியை கைதடி மேற்கைச் சேர்ந்த துரையப்பா - பொன்னு அவர்களின் ஏகபுத்திரன் சேர்திலிங்கத்துக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் கஜானா, சஞ்சிகா, யனுஜா, சிவஜனன் ஆகிய பிள்ளைகளைப் பெற்று இனிது வாழ்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனை வைத்திய சேவைக்கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் தனது சிரேஷ்ட புத்திரன் மனோறஞ்சனை சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கந்தையா - தவமணி யாழ்மாவட்ட சித்தமருந்துகள் உற்பத்தி விற்பனை சேவைக்கூட்டுறவுச்சங்கம் அவர்களின்மகள் செல்வராணிக்குத் திருமணம் செய்து வைத்ததன் பயனாக அவர்களுக்கு சஜிந்தன், பிரசாந்தன், மகிந்தன் ஆகியோரைப் பேரர்களாகப் பெற்றார்.

கனிஷ்ட புத்திரன் தனநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கை நெறியில் இறுதி வருடப் பரீட்சையை எழுதிய பின்னர் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்து வருகின்றார்.

வைத்தியநாதன் அவர்கள் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தமது குடும்ப நலனைக் கருத்திற் கொண்டு காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை உணவகத்திற் காசாளராகவும் தெல்லிப்பழை துர்க்கா திரை அரங்கு நிறுவனத்திற் காசாளராகவும் தனியார் சிற்றூர்திச் சேவையில் அம்பனையில் நேரக் கணிப்பாளராகவும் கடமையாற்றினார். அன்னார் தமது மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளுடன் இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் தமது பொழுதை தவப்பொழுதாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் அண்மைக் காலத்தை பன்னாலையை வதிவிடமாகக் கொண்டு தமது மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள் உடன் இருக்க 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அதிகாலை 2-30 மணியளவில் தமது அறுபத்தைந்தாவது வயதில் பறாளை ஈசுவர விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்தார்.

அமரர் வைத்தியநாதன் அவர்களை 1960 ஆம் ஆண்டு தொடக்கம் நன்கறிவேன். எனினும் அவர் அரச சேவையில் நின்றும் ஓய்வு பெற்ற பின்னர் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் எமது மகாஜனக் கல்லூரிக்கு அருகே வசித்து வந்தமையாலும் அவரின் பிள்ளைகள் மூவரும் என்னிடம் பல வருடங்கள் கல்வி கற்றமையாலும் எங்கள் தொடர்பு மிகவும் நெருக்கமானது.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்ற குறட்பாவிற்கிணங்க அவரது பிள்ளைகள் மூவரும் படிக்கும் காலத்தில் கல்வியிற் சிறந்து விளங்கியதோடு கடவுள்பக்தி, குருபக்தி நிரம்பியவர்களாகக் காணப்பட்டனர். பணிவு, அடக்கம், அன்பு நிரம்பியவர்களாக விளங்கினர். அதனால் அவரின் பெற்றோர்களின் பண்புகளைத் தெரிந்து கொண்டேன்.

அண்மைக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாக எமது தொடர்பு சிலகாலம் துண்டிக்கப்பட்டிருந்தது. எனினும் அண்மைக் காலத்தில் அன்னார் எமது ஊரில் வசிக்க வந்த அன்றே என்னைச் சந்தித்தார். "பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமா" எமது தொடர்பு தொடர்ந்தது. தினமும் பத்திரிகை வாசிப்பதற்காக வரும் போதெல்லாம் என்னுடன் உரையாடுவார்.

"வீரனைப் போரில் தெரியும் நல்லவனைச் சாவில் தெரியும்" என்பதற்கிணங்க அவர் நோயுற்று பாயிற்படுக்காது மற்றையவர்களுக்கு எவ்வித கஷ்டமும் கொடுக்காது மனைவி, மக்கள், பேரர்கள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலங்க விட்டு இறைபதம் எய்தினார். "வகுத்தான் வகுத்த வகை" எனக் கொண்டு ஆறுதல் எய்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பன்னாலை, ச. விநாயகரத்தினம்
தெல்லிப்பழை, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்,
2001-02-03. (யாழ்ப்பாண கல்வித் திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

கண்ணை இமை காப்பது போல
காலமெல்லாம் காத்துவந்தீர்
அன்புடைய நாயகரே உம்மை இன்று
அகிலமதில் இழந்திட்டேன் ஆற்றுவேனோ
துன்புடனே நானிருந்து வாடுதற்குத்
தூயவரே என்ன பிழை செய்தேனையோ
திங்களது இல்லாத வானம் போலச்
செகமீது எமதில்லம் தோன்றுதையோ.

## மக்கள் புலம்பல்

எங்கு சென்றீர் எமது அருமை அப்பாவே
அல்லும் பகலும் அன்பினைச் சொரிந்தீர்
அறிவினைத் தந்தீர் அறியாப்பிழையினை
அமைதியாகப் பொறுத்தீர் அன்புடைய நீங்கள்
அகிலத்தில் நீங்கி ஆண்டவனடி சேர்ந்தீரோ
ஆரினி அவனியில எமக்கு ஆறுதல் கூற.

## மருமக்கள் புலம்பல்

அன்பினுறு மாமாவே அன்பினுறைவிடமே
இந்நாளி லெவ்விடந்தா னெய்தினீர் - மன்னுலகில்
வண்ணமுகம் நோக்கி வாய்மொழிகள் யாம்கேட்ப
எந்நாளில் வந்துறுவீரீங்கு.

## பேரர் புலம்பல்

கண்ணே மணியே எனக் கொஞ்சிக் குலாவும்
எம் இனிய தாத்தாவே கொஞ்சத் தூரம்கூட
சொல்லாமல் போகாத நீங்கள் - இந்நாளில்
மன்னுமுன் பேரர்யாம் மாதுயரம் தானடைய
என்னே மறைந்தகன்றீ ரிங்கு.

## பெறாமக்கள் புலம்பல்

எங்கள் பெறாத்தந்தையெனவே எப்போதும் போற்றும்யாம்
உங்களுடல் காணா துயரிழந்தோம் - தங்குலகில்
காற்றாய் மறைந்துநீர் சாருடலம்தான் விடுத்தீர்
சாற்றுகுறை யாவுளவோ தான்.

## சகோதரர் புலம்பல்

ஓர் தாய்ப்பிள்ளையாய் உதித்தோம் நாங்கள்
ஓர் உயிராய் அன்பாய் வாழ்ந்தோமன்றோ
ஓர் கூட்டில் வாழ்ந்த ஓர் கிளியை இழந்தாற் போல
உன் இழப்பால் துடிக்கின்றோம் சோதரனே
பிறப்போமோ மீண்டும் இம் மண்ணின் மீது
சோதரராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு மருந்தேற்றல்

- ☐ தடுப்பு மருந்தேற்றுவதன் மூலம் பயங்கரமான நோய்களிலிருந்து பாதுகாப்பை பெற்று, கொள்ளலாம்.
- ☐ குழந்தைகள் கர்ப்பிணித்தாய்மார்கள் தடுப்பு மருந்தை சரியான படி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ☐ ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம்.

## குழந்தைகளுக்கான தடுப்பு மருந்தேற்றல்

- ☐ பிறந்த உடன் (0 — 4 கிழமைகளில்) BCG வக்சின் (காசநோய் தடுப்புமருந்து) வைத்தியசாலையில் இருந்து போகும் போது இத் தடுப்புமருந்து வழங்கப்பட்டதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- ☐ 2ம் மாதம் DPT, OPV - 1ம் தடவை (முக்கூட்டுவக்சின், போலியோ சொட்டு மருந்து)
  முக்கூட்டு வக்சின தொண்டைக்கரப்பன், குக்கல், ஏற்புவலி என்பவற்றிற்கான தடுப்பு மருந்தாகும்.
- ☐ 4ம் மாதம் DPT, OPV — 2ம் தடவை (முக்கூட்டு வக்சின் போலியோ தடுப்பு மருந்து)
- ☐ 6ம் மாதம் DPT, OPV — 3ம் தடவை (முக்கூட்டு வக்சின், போலியோ தடுப்பு மருந்து)
- ☐ 9ம் மாதம் — சின்னமுத்து தடுப்பு மருந்து
  9ம் மாதம் முடிந்த உடன் இம்மருந்து கொடுத்ததை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்

## சிறுவர்களுக்கான தடுப்பு மருந்தேற்றல்

18ம் மாதம் (1½ வயது) — DPT. OPV 4ம் தடவை (Booster Dose) முக்கூட்டு வக்சின், போலியோ தடுப்பு மருந்து

3ம் வயது முடிவில் — MR வக்சின் (சின்னமுத்து, ருபெலா தடுப்பு மருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 வயது — OPV போலியோ தடுப்பு மருந்து
5ம் தடவை
DT இருகூட்டு தடுப்பு மருந்து

10 - 15 வயது — ஏற்புவலி தடுப்புமருந்து
பெண்பிள்ளைகளுக்கு ருபெலா தடுப்பு மருந்து என்பன வழங்கப்பட வேண்டும்

△ சரியான நேரத்தில் தடுப்பு மருந்தேற்றல்

△ தவறும்போது வைத்திய ஆலோசனையைப் பெற்று தடுப்பு மருந்தை பெற்றுக்கொள்ளுங்கள்
(உதாரணமாக BCG தடுப்பு மருந்தினை பிறந்தவுடன் பெறாவிடின் 6 மாதம் - 5 வயது வரை பெற்றுக்கொள்ளலாம்.)

## கர்ப்பிணித்தாய்மார்களிற்கான தடுப்பு மருந்தேற்றல்

☐ 1ம் கர்ப்பம் எனில்

△ கர்ப்பம் தரித்து 12 கிழமைகளின் பின்

△ ஏற்புவலி தடுப்பு மருந்து (TT 1) 1ம் தடவை

△ 1ம் தடவை கொடுத்ததில் இருந்து 6-8 கிழமையின் பின் ஏற்புவலி தடுப்பு மருந்து (TT 2) 2ம் தடவை

☐ அடுத்தடுத்து நெருங்கிய கர்ப்பங்களிற்கு....
கர்ப்பம் தங்கி 12 கிழமையின் பின் ஏற்புவலி தடுப்பு மருந்து (TT) Booster Dose ஒரு முறை ஏற்றினால் போதுமானது

## ருபெலா (ஜேர்மன் சின்னமுத்து) தடுப்பு மருந்தேற்றல்

முன்பு குறிப்பிட்டவாறு குழந்தைப் பருவத்தில் தடுப்பு மருந்து வழங்கப்படாத சகல 15-44 வயதிற்கிடைப்பட்ட பெண்களுக்கு வழங்கப்படுகிறது

☐ ஒரு தடவை போதுமானது

☐ ருபெலா நோய் சிசுக்களைப் பாதிக்கிறது. எனவே தடுப்பூசி பெறுவதன் மூலம் உங்கள் குழந்தைகள் பாதிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்

☐ தடுப்பூசி பெற்று 3 மாதம் வரை கர்ப்பம் தரிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்புவலி தடுப்பு ஊசி ஏற்றல்

குழந்தைப் பருவத்தில் சரியான முறையில் வழங்கப்படில் 10 வருடத்திற்கு ஒரு முறை ஒரு ஊசி (Booster Dose) போட்டால் போதுமானது. அல்லாவிடில் ஏதாவது காயங்கள் ஏற்படும் போது

1ம் தடவை — காயம் ஏற்பட்ட உடன்

2ம் தடவை — 6 கிழமையின் பின்

3ம் தடவை — 3 மாதத்தின் பின்

## நீர் வெறுப்புநோய் தடுப்பு மருந்தேற்றல்

☐ யாழ்ப்பாணத்தில் அண்மையில் அதிகரித்துவரும் ஒரு ஆட்கொல்லி நோய்

☐ எப்போது போட வேண்டும்?

1) கடித்த நாய்க்கு நீர் வெறுப்பு நோய்க்கான அறிகுறி காணப்படும் போது

2) கடித்த நாய் 10 நாட்களுக்குள் இறப்பின்

3) கடித்த நாய் பற்றிய தகவல்களை அறிய முடியாத போது

☐ நாய் மட்டுமன்றி ஏனைய விலங்குகள் கடித்த போதும் இந் நோய் பரவலாம்.

☐ நாயின் உமிழ்நீரில் இந்நோய்க்கான காரணி காணப்படுவதால் -கடிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை - சிறிய காயங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் நாய் நக்கும்போதும் பரவலாம்.

| | | |
|---|---|---|
| கடித்தவுடன் | — | 1ம் தடவை |
| 3 நாளின் பின் | — | 2ம் தடவை |
| 7 நாளின் பின் | — | 3ம் தடவை |
| 14 நாளின் பின் | — | 4ம் தடவை |
| 34 நாளின் பின் | — | 5ம் தடவை |

அல்லது

| | | |
|---|---|---|
| கடித்தவுடன் | — | 1ம் தடவை (Booster Dose) |
| 7ம் நாள் | — | 2ம் தடவை |
| 21ம் நாள் | — | 3ம் தடவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் (பெரியபரியாரியார்)

**Dr. தம்பிப்பிள்ளை**

**டாக்டர் பூலோகசுந்தரம் (L.I.M. Madras)**
(முன்னாள் கொழும்பு அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி விரிவுரையாளர்)
\+
கமலாதாட்சி + தெய்வானைப்பிள்ளை

- இராமநாதன்
- பத்மநாதன் + பூமணி
  - பத்மலீலா + திருஞானசம்பந்தமூர்த்தி
  - கமலேஸ்வரி + அருந்தவச்செல்வம்
  - ரஞ்சிதமலர் + சிறிசுகிர்தராஜா
  - மனோகரன் + யஜோதினி
- Dr. நாகநாதன் + சின்னம்மா
  - பூலோகரஞ்சினி + சேகர்
  - கமலரஞ்சினி + தியாகராஜா
  - பூங்கமலம் + கணேஷ்
  - தபேந்திரநாதன் + பங்கஜம்
  - ராஜகுலநாதன்
  - குலராணி + மிரண்டோ
  - சேகரமுதலியார்
- வைத்தியநாதன்
- Dr. கயிலாயநாதன் + கனகாம்பிகை
  - பிரியதர்ஷினி
  - சுகந்தி
  - பூலோகசுந்தரம்
  - நிரஞ்சனி

பூலோகரஞ்சினி + சேர்திலிங்கம்
- கஜானா
- சஞ்சிகா
- யனுஜா
- சிவஜனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவழி

நாகலிங்கம் + நாகமுத்து

- Dr. மனோரஞ்சிதம் + தவத்துரை
  - துஷ்யந்தன்
  - பிரியந்தன்
  - வட்சலா
- சரஸ்வதி + நாகநாதர்
- காமாட்சிப்பிள்ளை + அப்பையா
  - விக்னேஸ்வரி + பாலசுப்பிரமணியம்
  - சாரதாதேவி + சிவபாலரட்ணம்
  - கமலாதேவி + இந்திரகேஸ்வரன்
  - வசந்தாதேவி + பாலச்சந்திரன்
  - பாலச்சந்திரன் + உஷா
- பரிபூரணம் + சிவானந்தம்
  - லலிதா + சுப்பிரமணியம்
  - சிவகுருநாதன்
  - கிரிஜா
  - உதயணன்
  - ரவீந்திரன் + இராசம்மா
  - சுகுமார்
- தனலட்சுமி

வைத்தியநாதன் + தனலட்சுமி

- மனோறஞ்சன் + செல்வராணி
  - சஜிந்தன்
  - பிரசாந்தன்
  - மகிந்தன்
- தனநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

இறைவனடி எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் வைத்தியநாதன் அவர்களின் ஈமச்சடங்குக்கு நேரில் வருகை தந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிற் பங்கு கொண்டவர்களுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டு தவிய பாரதி பதிப்பகத்தாருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

பன்னாலை,
தெல்லிப்பழை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்கள்

பாரதி பதிப்பகம், 430, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org